செய்தி வெளியீடு எண்:61 நாள்–20.01.2010

**<u>செய்யாறு சிப்காட் தொழில் வளாகத்தில்</u>**
**<u>ரூபாய் 1 கோடியே 77 இலட்சம் மதிப்பில்</u>**
**<u>புதிதாக அமைக்கப்பட்ட வடிகால் வசதியுடன் கூடிய தார் சாலையை</u>**
**<u>மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் திறந்து வைத்தார்</u>**

தமிழக அரசு தொழில்துறையில் பின்தங்கிய திருவண்ணாமலை மாவட்டத்தில் தொழில் வளர்ச்சிக்காக செய்யாறில் சிப்காட் தொழில் வளாகத்தினை அமைத்தது. திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு வட்டத்தில், மாங்கால், மாத்தூர் மற்றும் செல்லப்பெரும்புலிமேடு கிராமங்களில் 631 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டுள்ள சிப்காட் தொழில் வளாகத்தில், அதன் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் விதமாக ரூபாய் ஒரு கோடியே 77 இலட்சம் மதிப்பில் புதிதாக அமைக்கப்பட்ட வடிகால் வசதியுடன் கூடிய தார் சாலையை மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (20.1.2010) திறந்து வைத்தார்.

ஏற்கனவே, இந்த தொழில் வளாகத்திற்கு தேவையான தண்ணீர் (1 MGD), செய்யாறு ஆற்றிலிருந்து சுமார் ரூபாய் 7 கோடியே 80 இலட்சம் செலவில் கிணறுகள் தோண்டப்பட்டு அதற்கு தேவையான நீர்த்தேக்க தொட்டிகள் அமைக்கப்பட்டு தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டுவருகிறது. சிப்காட் தொழில் வளாகத்திற்கு தேவைப்படும், மின்சாரத்திற்காக, இத்தொழில் வளாகத்திலேயே ஒரு துணை மின்நிலையம் அமைக்கப்பட்டு மின் விநியோகம் செய்யப்பட்டுவருகிறது.

இவ்வளாகத்தில், 2006ஆம் ஆண்டில் காலணிகள் தயாரிப்பதற்கான சிறப்பு பொருளாதார மண்டலம் 275 ஏக்கர் நிலப்பரப்பில் நிறுவப்பட்டு, இதன் மூலம் ஏறத்தாழ 4000 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. மேலும், இப்பகுதியில் 255 ஏக்கர் நிலப்பரப்பில் மகேந்திரா நிறுவனத்தின் மூலம் பெரிய தொழிற்சாலை அமைப்பதற்கான முன்னேற்ப்பாட்டுப் பணிகள் நடைபெற்றுவருகிறது. மேலும், 90 ஏக்கர் பரப்பளவில் 7 தொழிற்சாலைகள் நிறுவுவதற்கு 2007 ஆம் ஆண்டு முதல் உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு, நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்கொண்டு இத்தொழில் வளாகத்தை விரிவுப்படுத்துவதற்கான பணிகளும் நடைபெற்று வருகிறது.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு, முன்னாள் அமைச்சர் திரு.கு.பிச்சாண்டி, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. சுந்தர், திரு. விஷ்ணுபிரசாத், தொழில்துறை செயலாளர் திரு. ராஜீவ்ரஞ்சன், சிப்காட் நிறுவனத்தின் தலைவர் திரு.என்.கோவிந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

* * * * * * * * *

வெளியீடு–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.